புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்பு



A.K.Mayooran

www.edu.lk

01. இல்ல விளையாட்டுப் போட்டியிலே மறவர் இல்லம் சூரர் இல்லத்தை விட அதிக புள்ளிகளைப் பெற்றாலும் வீரர் இல்லத்தை விட மிகக் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தது. இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற இல்லங்களை வரிசைக் கிரமப்படி குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) சூரர், வீரர், மறவர் (2) வீரர், சூரர், மறவர் (3) வீரர், மறவர், சூரர்

02. எங்கள் தோட்டத்தில் உள்ள மரங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை பழமரங்கள் ஆகும். எல்லாப் பழமரங்களிலும் காய்கள் காணப்பட்டன. காய்கள் உள்ள மரங்களில் சில பழமரங்கள் அல்லாதனவாகும். இவ்விபரங்களின்படி கீழே காணப்படும் எக்கூற்றுச் சரியானதாகும்?

(1) தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலும் காய்கள் உண்டு.

(2) பழமரங்கள் அல்லாத மரங்கள் சிலவற்றில் காய்கள் உண்டு.

(3) காய்கள் உள்ள எல்லா மரங்களும் பழ மரங்கள் ஆகும்.

www.ikedu.lk

03. சரவணனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும்போது சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணனின் வயதை விட இருமடங்காக இருந்தபோது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 4 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 8 ஆண்டுகள்

04. சரவணின் வயதைவிட, சமீனின் வயது மூன்று மடங்காக இருந்தபோது சரவணனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 2 ஆண்டுகள் (2) 4ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள்

www.ikedu.lk

05. அனுமதி கிடைத்ததும் கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவியைப் போல நான் வாசற் பக்கம் ஓடினேன். பின்வருவனவற்றுள் எது கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவியைப் போல என்பதன் கருத்தைத் தருகிறது?

(1) மிகக் கஷ்டத்துடன் வாசற்பக்கம் சென்றேன்.
(2) மிக வேகமாக வாசற் பக்கம் சென்றேன்.
(3) மிக மெதுவாக வாசற் பக்கம் சென்றேன்.

06. "கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பம் உடையவர்கள்." இக்கூற்றுக்கு ஏற்ப

(1) விருந்து உபசாரம் செய்வதில் கிராமத்தில் இருப்பவர்கள் மட்டுமே விருப்பம் உடையவர்கள்.
(2) நகரங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பம் இல்லாதவர்கள்.
(3) கிராமங்களில் வசிப்பவர்கள் விருந்து உபசாரம் செய்வதில் விருப்பமில்லாதவர்கள் அல்லர்.

www.ikedu.lk

07. இராணி, சுதன், சீதா, இராமன் ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். இராமனை விட 5 புள்ளிகள் கூடுதலாக இராணி பெற்றதுடன், சீதா சுதனை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தாள். இராணியும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர், ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?

(1) சீதா (2) ராமன் (3) சுதன்

08. சீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனில், இராமன் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

(1) 43 (2) 53 (3) 56

www.ikodu.lk

முதலில் தரப்பட்ட சொல்லை நன்கு விபரிக்கும் சொல்லை தெரிவுசெய்க

09. வங்கி என்பது

(1) பணக் கொடுக்கல் வாங்கல் செய்யும் இடம்.
(2) பணத்தைச் சேமிக்கும் இடம்.
(3) பணத்தைக் கடனாக வழங்கும் இடம்.

10. தொழிற்சாலை என்பது

(1) பொருள்கள் பரிவர்த்தனை செய்யப்படும் இடம்.
(2) பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடம்.
(3) பொருள்களை விற்பனை செய்யும் இடம்.

www.ikeout.lk

11. குறிஞ்சி மாகாணத்தில் பூங்குடிக் கிராமத்தின் வீடுகளில் போக்குவரத்துக்காக சைக்கிள் அல்லது மோட்டர் சைக்கிள் காணப்பட்டது. இவை இரண்டும் உள்ள ஒரு வீடும் இல்லை. குறிஞ்சி மாகாணத்தில் மோட்டர் சைக்கிள் உள்ள வீடுகள் பூங்குடிக் கிராமத்தில் மாத்திரமே உண்டு. இவ்விவரங்களின்படி உறுதியாகக் கூறக்கூடியது யாது?

(1) குறிஞ்சி மாகாணத்தில் மோட்டர் சைக்கிள் உள்ள வீடுகள் சைக்கிள் உள்ள வீடுகளை விட அதிகம்.

(2) சைக்கிள், மோட்டர் சைக்கிள் இரண்டும் உள்ள வீடுகள் எதுவும் பூங்குடிக் கிராமத்தில் இல்லை.

(3) குறிஞ்சி மாகாணத்தில் பணக்காரர்களின் வீடுகளில் சைக்கிள், மோட்டர் சைக்கிள் இரண்டும் இருந்தன.

www.lkedu.lk

12 மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டிப் பின்வருமாறு கூறினான். "எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்தபோதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார்". இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்.

(1) தனது தந்தையின் (2) தனது (3) தனது மகனின்

www.lkedu.lk

இது கண்ணைக்கவரும் அழகு மிக்க பிரதேசம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று மரங்களும் செடிகளும் கொடிகளும் நிறைந்து காணப்படுகின்றன. நான் மேல் மாடியில் உள்ள எனது அறை யன்னலைத் திறந்து பார்த்தபோது கண்ணுக்கெட்டியதூரம் வரை பரந்த வயல்களும் தென்னந் தோப்புகளும் வேறு மரங்களும் மனதை மயக்கும் காட்சிகளாகக் காணப்பட்டன. நான் இங்கு வந்து சில நாள்களே கடந்துள்ளன. இந்த அழகிய சுற்றாடல் மகிழ்ச்சி அளித்தபோதும், இதனை மீறிக்கொண்டு ஓர் இனந்தெரியாத துன்பமும் மனதின் அடித்தளத்தில் இருந்து எழுந்து கொண்டிருக்கிறது. எனது உறவினர்களினதும் நண்பர்களினதும் நினைவே இதற்குக் காரணமாகும். கல்விக்காக இவ்வளவு தூரமான இந்த இடத்திற்கு வருகைதந்தது இத்தகைய துன்பத்தை எழுப்பக்கூடும் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

13 இங்கு கூறப்படும் மனிதர் வெளிநாட்டவர்

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

14 இங்கு கூறப்படுபவர் பல்கலைக்கழக மாணவர்

(1) ஆம் (2) இல்லை (3) சொல்லமுடியாது

www.ikeduk

15. அமீன் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை. அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான். தாயும் தந்தையும் பாடங்களைப் படிக்கும்படி எப்போதும் அறிவுரை கூறுவர். அமீன் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. அமீனின் பெற்றோர்களுடைய செயலை விவரிக்கும் மிகச்சிறந்த தொடர் பின்வருவனவற்றுள் எது?

(1) அது குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போன்ற செயலாகும்.
(2) அது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற செயலாகும்.
(3) அது குளிக்கப் போய் சேறு பூசியது போன்ற செயலாகும்.

16. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?

(1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
(2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
(3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்

www.ikeduk

17. ஒரு காட்டில் ஒருபுலி வசித்து வந்தது. புலி வயோதிபப்பருவம் அடைந்ததனால் தனது இரையைத் தேடுவது அதற்குச் சிரமமாகி விட்டது. ஒரு நாள் பசு ஒன்றின் தோலைப் போர்த்திக் கொண்டு புலி பசுக்கூட்டத்தினுள் நுழைந்தது. தன்னையும் பசு எனக்கூறிக் கொண்டது. பின்னர் பசுக்களை ஒவ்வொன்றாகப் பிடித்துத்தின்ன ஆரம்பித்தது. இதனாலேயே "பசுத்தோல் போர்த்த புலி" என்ற தொடர் வழங்கப்படுகிறது. இத்தொடரின் பொருள் யாது?

(1) உலகில் தீயவர்கள் எல்லோரும் நல்லவர் போல நடிப்பார்கள்.
(2) நல்லவர் போல நடிக்கும் தீயவர்களும் உலகில் உள்ளனர்.
(3) உலகில் நல்லவர்கள் எல்லோரும் தீயவர்கள் போல நடிப்பார்கள்.

www.ikeduk

18. பசியினால் வாடிய நரி ஒன்று இரை தேடிச் செல்லும் போது திராட்சைக் குலை ஒன்றைக் கண்டு அதனைப் பறித்துத் தின்றது.
மேலுள்ள வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
(1) நரிக்குப் பசி ஏற்படுவதில்லை.
(2) நரி இரைதேடிச் செல்வதில்லை.
(3) நரி திராட்சையை உணவாகக் கொள்வதில்லை.

19. "ஒரு நரி கோபமடைந்து ஆமை ஒன்றை நீரில் தள்ளி விட்டபோது ஆமை நீரில் அமிழ்ந்து இறந்து போனது"
இவ்வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
(1) ஆமைக்கு நரியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை.
(2) நரியைக் கண்டவுடன் ஆமை பயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லை.
(3) ஆமை நீரில் அழிந்து இறப்பதற்கு இடமில்லை.

www.ikedu.lk

பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

இப்போது கேட்பது இரண்டாவது வெடியின் சத்தமாகும். வெடிச் சத்தம் எந்தத் திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து, பிரிந்து ஓடிவந்து இங்கு ஒளிந்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயம்பட்டு இரத்தம் பாய்கிறது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடிபட்டதா? தந்தை வெடித் தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும் பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித் திரியும் முறை பற்றியும் பகைவர்களிடமிருந்து தப்பும் முறை பற்றியும் தந்தை எப்போதும் எனக்குச் சொல்லித் தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின வெடிக்கு இரையாகி விட்டார்.

20. இங்கு கூறப்படுவது
(1) அநாதையான பிள்ளையின் சிந்தனை
(2) ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை
(3) வேட்டைக்குச் சென்ற பிள்ளையின் சிந்தனை

21. இங்கு தரப்பட்டுள்ள விபரங்களின்படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது
(1) காலையில் எனக் கூறலாம்.
(2) மாலையில் எனக் கூறலாம்.
(3) நாளின் எந்த நேரத்தில் என்று கூற முடியாது.

www.ikeduk

22. விமலா காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவளது நிழல் அவளது வலக் கைப் பக்கத்தில் விழுவதைக் காணக் கூடியதாக இருந்தது. அவ்வாறெனில் அவள் எத்திசையை நோக்கிச் சென்றாள்?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

23. குமார் தனது 10 வது பிறந்தநாளை இற்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 4 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்பக் குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?

(1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதின் இருமடங்காகும்?

(2) இன்று குமார் லலிதாவிலும் இரு ஆண்டுகளினால் மூத்தவன்

(3) இன்னும் 5 ஆண்டுகளில் லலிதாவின் வயது 10 ஆண்டுகளாகும்.

www.ikeou.lk

5 5 K 6 6 J K K 5 S J 5 B J 8 J R R 6 5 K R K 6 J J 6 S S 6 J J

24. இலக்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிலையில் எத்தனை J எழுத்துக்கள் உள்ளன?
(1) 10 (2) 9 (3) 8

25. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?
(1) இலக்கம் 8 (2) எழுத்து K (3) இலக்கம் 6

26. இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரேவகை எழுத்துக் காணப்படுகிறது. அந்த எழுத்து யாது?
(1) எழுத்து J (2) எழுத்து K (3) எழுத்து R

www.ikeau.lk

27. ஓர் சரிலக்க எண்ணிலுள்ள இரு இலக்கங்களையும் கூட்டும்போது 8 ஆகவும் , இரண்டு இலக்கங்களுக்கிடையிலான வித்தியாசம் 4 ஆகவும் உள்ள எண் யாது?

1. 37 2. 26 3. 95

28. அபியின் இடது பக்கத்தில் 8 பேரும் வலது பக்கத்தில் 9 பேரும் உள்ளனர் எனின் அந்நிரையில் உள்ளவர்கள் எத்தனை பேர்? 1. 17 பேர் 2. 19 பேர் 3. 18 பேர்

www.lkedu.lk

29. A என்பவர் B யின் தம்பி . B என்பவர் C யின் தம்பி. C என்பவர் D யின் தம்பி. எனவே யிற்கு D யார்?

1. தம்பி 2. அண்ணா 3. பெரியப்பா

30. இரண்டு அடுத்துள்ள எண்களைக் கூட்டும்போது 35 விடையாகப் பெறப்படும் அவ் எண்களில் மிகப்பெரிய எண்ணாக அமைவது எது?

1. 17 2. 18 3. 19

www.lkedu.lk

31. "சூரியன் மேற்குத் திசையில் மறையும்" இந்நிகழ்வு

1) இது பெரும்பாலும் நிகழும் 2) சில வேளைகளில் நிகழும்

3) இது எப்போதும் நிகழும்

32. 

இவ் உருளையை கோடு வழியே வெட்டும்போது நடுவே தோன்றும் வடிவம் யாது? 1) சதுரம் 2) செவ்வகம் 3) வட்டம்

www.lkedu.lk

33. பரன் ஒருகுறித்த ஆண்டில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் தனது சித்தப்பா வீட்டிற்குச் சென்றிருந்தான். அவன் பெப்ரவரி மாதத்தில் ஐந்து தடவை சித்தப்பா வீட்டிற்கு சென்றிருந்தான். எனின், அவன் சென்ற ஆண்டாக அமையக் கூடியது?

1. 2015
2. 2016
3. 2017

34. நீள அலகுகளில் (mm,cm,m,km)அளக்கக் கூடிய நீள அளவுகளுக்கேற்ப ஏறுவரிசைப்படுத்தப்பட்டால்

1. வீதி, துணி,பென்சில், காகிதம்.
2. காகிதம்,பென்சில்,துணி,வீதி
3. பென்சில்,காகிதம்,வீதி, துணி

www.lkedu.lk

37. ஒரு நான்கிலக்க எண்ணில் நூறாமிட இலக்கம் ஓராமிட இலக்கத்தின் இருமடங்காகும். ஆயிரமாமிட இலக்கம் ஓராமிட இலக்கத்தின் மூன்று மடங்காகும். அவ்வெண்ணாக அமையக் கூடியதல்லாதது?

1. 3251 2. 9623 3. 3521

38. ஒரு மாம்பழத்தின் விலை ஒரு தோடம்பழத்தின் விலையைவிட ரூ.8 அதிகமாகும். 4மாம்பழத்தினதும் 3 தோடம்பழத்தினதும் விலை ரூ.172 ஆயின், 2மாம்பழங்களின் விலை எவ்வளவு?

1. ரூ.56 2. ரூ.40 3. ரூ. 24

www.lkedu.lk

39 வருடங்களின் முன் தாயின் வயது மகளின் வயதைவிட 4 மடங்கும் 4வயதும் அதிகமாகும். தற்போது இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 66 எனின், 6வருடங்களின் முன் மகளின் வயது யாது?

1. 12 வயது
2. 10 வயது
3. 15 வயது

40. நிதா ஒரு குறித்த நேரத்தில் ஒரு புத்தகத்தில் 63ம் பக்கத்திலிருந்து 92ம் பக்கம் வரை வாசித்தான். அவன் குறித்த நேரத்தில் வாசித்த பக்கங்கள் எத்தனை?

1. 29 பக்கங்கள்
2. 30 பக்கங்கள்
3. 28 பக்கங்கள்

www.lkedu.lk

www.lkedu.lk

10. நாதனுக்கு 3 ஆண் சகோதரர்கள். அவனின் அக்காவிற்கு இரண்டு அண்ணாமாரும் குடும்பத்தில் ஒரு பெண்பிள்ளையாயின், அவனின் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எத்தனை பேர்?

04.
04.
1. 4Ngu; 2. 5Ngu; 3. 6 Ngu;

11. ஒரு வாகனத்தரிப்பிடத்தில் உந்துருளிகளினதும் முச்சக்கரவண்டிகளினதும் அவற்றின் சக்கரங்களினதும் மொத்த எண்ணிக்கை 105 ஆயின், வாகனங்களின் எண்ணிக்கை யாது?

1. 15 2. 45 3. 30

www.lkedu.lk